අධිකරණ අමාත්‍යාංශය நீதி அமைச்சு MINISTRY OF JUSTICE

ජාතික සමගිය හා ප්‍රතිසංධානය සඳහා වන කාර්යාලය
தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்
Office For National Unity And Reconciliation

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை : 01

சேவைப் பிரிவு : **JM 1-1**

## பதவியின் தன்மை

- நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஊழியர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்.

- நிறுவனத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் விடுமுறை தொடர்பான பணிகளை மேற்பார்வை செய்தல்.

- நிறுவன ஊழியர்களின் நலன்புரி வசதிகள், பணிக்கொடை, படிகள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஏனைய நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் மற்றும் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- கடமைப் பணிகளுக்காக வாகனங்களை ஒதுக்குதல் மற்றும் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கைகள்.

- தேவையான சந்தர்ப்பங்களில் பிரிவின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய நிர்வாக முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அது தொடர்பில் உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

- நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி தொடர்பான பணிகளைச் செய்தல், மேம்படுத்துதல் மற்றும் நிறுவனத்திற்குப் பொருத்தமான கொள்கைகளை வகுப்பதற்கு ஒத்துழைத்தல்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

- நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுதல்.
- பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

---

## தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வியாபார நிர்வாகம் அல்லது பதவியுடன் தொடர்புடைய பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

## வயதெல்லை

22 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

---

## சம்பள அளவுத்திட்டம்

**JM 1-1 – 2025 - ரூ. (72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED